முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் முத்தானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

30.05.2019, வியாழக்கிழமை

1. **காக்கும் சக்தியாக வந்த ஞானியே**
**கந்தவேலனின் சூட்சும யோகியே**
**தேக்கமின்றி உன் வழி மக்கள் வர**
**திருவருள் பெறுவர் என்று கூறி**
2. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
குறையிலா **விகாரி விடை திங்கள்**
**தெரியவே மூவையோர் திகதி குருவாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 16ம் நாள் 30.05.2019, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு முத்தானந்தர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர் ஞானத்தலைவன் அவதார
ஞானதேசிகா உன் சேவையில்
ஞானயுகம் அமைவது உறுதி
4. உறுதி கொண்டு உலக மக்கள்
உலகமெங்கும் அரங்கன் புகழை
ஆறுமுகா என்று கூறி பரப்ப
அகிலத்தில் முருகன் அருள் கடாட்சம்
5. கடாட்சம் பெருகி கலிவாழ் மக்களுக்கு
கவலைகள் யாவும் அகலும்
இடரெனும் சகல கட்டங்களும்
எல்லா பிரச்சனைகளும் விலகி
6. விலகி மக்களுக்கு சிறப்பு
வினை என்பது பற்றாத
கலகமில்லா வாழ்வும் வளமும்
காண வரும் சகல பாதுகாப்பும்
7. காப்பாக அரங்கன் வந்த
கலிமீட்பின் உண்மை கண்டு
ஒப்பு கொண்டு வருபவர்க்கு
ஒருபோதும் துன்பம் அணுகாதப்பா
8. அப்பா அரங்கா அருட்குருவே
ஆபத்து என்றால் அழைக்க
காப்பாக வந்து உடன் அருளி
காக்கும் ஞானியே தவசியே
9. தவசியே உன்னால் மாற்றம்
தரணியே காப்பாய் பெறுமப்பா
அவசியம் அறம் வளர்க்க
ஆன்மீக அமைப்பு கொண்ட ஞானியே

10. ஞானியே வானவர் மெச்சும்
ஞானசபை தருமசபை உன் சபை
இனிமைபட மக்களுக்கருளி
எக்கணமும் அருளாய் அறமாய்

11. அறமாய் துணைவரும் அரங்கா
அப்பனே ஞானக் கடலே
வரமென உன்னை வணங்க
வையகம் ஞானயுகமாகுமப்பா நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் முத்தானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உலகையே காக்கின்ற மகா சக்தியாக வந்துதித்த மகா ஞானியே கந்தவேலன் முருகப்பெருமானின் சூட்சும சக்தி வடிவமே ஞானயோகியே தடையின்றி உமது ஞானவழியினை ஏற்று மக்களெல்லாம் உம்மைப் பின் தொடர்ந்து வர, கடவுளின் அருளை உமது மூலமாய் பெறுவார்களப்பா என்றே அரங்கா உமது புகழை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 16ம் நாள் 30.05.2019, வியாழக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தன்னையே முத்தானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் முத்தானந்தர்.

எல்லையற்ற சக்தி கொண்ட உயர் ஞானத்தலைவரும் முருகப்பெருமானின் அவதாரமாக வந்திட்ட ஞானதேசிகனே அரங்கமகா தேசிகனே உமது தன்னலமற்ற சேவைகளால் இவ்வுலகம் ஞானபூமியாக மாறப் போவது உறுதியப்பா. அரங்கா உமது புகழை மக்களெல்லாம் உம்மீது அளவிலாது நம்பிக்கையுடன் உலகமெங்கும் பரப்புவார்களேயானால் ஆறுமுக அரங்கா முருகா என்று உலகமெலாம் உமது நாமங்கள் ஜெபிக்கப்படுமானால் உலகினில் முருகப்பெருமானின் அருட்கடாட்சம் பெருகி கலியுக மக்களுக்கு உண்டான கவலைகள் அனைத்தும் அகன்றுவிடும். அவர்களுக்கு உண்டான துன்பம் மிக்க சூழ்நிலைகள் எல்லாம் மாறி எல்லா பிரச்சனைகளும் தானே விலகி மக்களுக்கு மேலும் வினைகள் பற்றாதும், கலகமற்ற அமைதியான வாழ்வும் வளமும் ஞானிகளின் அருளாசியும் அருள் பாதுகாப்பையும் ஆறுமுக அரங்கன் மூலமாக பெற்று சிறப்படைவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் இவ்வுலகினில் அவதரித்த நோக்கத்தினை அறிந்து தெளிந்து உண்மையுடன் அரங்கரை குருவாய் ஏற்றுக் கொண்டு அரங்கரை பின்தொடர்ந்து வருகின்றவர்களுக்கு ஒருபோதும் துன்பங்கள் அணுகாதப்பா. அப்பனே அரங்கமகா தேசிகனே உலகினின் அருட்குருவே ஞானமகா தேசிகனே உம்மை உலகோர் மனம் உருகி அரங்கா குருநாதா என்றே ஆபத்து சமயத்தில் அழைத்திட்டால் உடன் விரைந்து காக்கும் அருள் ஞானியே மகா ஞானதவசியே உம்மால் இவ்வுலகில் கலியுகம் மாறி ஞானயுகமாக ஆகப் போவது உறுதியப்பா, உம்மால் இந்த உலகம் காக்கப்படுமப்பா.

அறம் வளர்ப்பதையே குறிக்கோளாய் கொண்ட ஆன்மீக அமைப்பை உடைய மகா ஞானியே, தேவர்களும், ஞானிகளும் போற்றி புகழும்படியான ஞானசபையப்பா, உமது சபை தருமசபையப்பா. உமது சபை அன்புடன் மக்களுக்கு அருள் செய்து எக்கணமும் அருளாய் அறமாய் திகழ்ந்து உம்மை நாடினோர்க்கு எக்கணமும் துணையாய் வருகின்ற ஞானக்கடலே உம்மை வணங்குவது அவரவர் செய்திட்ட தவத்தின் வரப்பயனாய் எண்ணி வாய்ப்பினை பயன்படுத்தி வணங்கி வருபவர்களேயானால் இவ்வுலகம் உம்மால் விரைந்து ஞானம் அடையுமப்பா எனக் கூறுகிறார் மகான் முத்தானந்தர்.

–சுபம்–